# க.பொ.த. (உ.தர) உதவிக் கருத்தரங்கு - 2015

## 33 - கணக்கீடு I

2 மணித்தியாலங்கள்

**கவனிக்கவும் :**

* ★ இலக்கம் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு சரியான விடைகளின் இலக்கத்தை முன்னாலுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.
* ★ இலக்கம் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான சரியான விடையை எழுதவும்.

01. காவ்யா வணிகம் ரூபா 55000 வங்கிக்கடன் தவணைக்கட்டணத்தைக் காசாக செலுத்தியதுடன், அதில் உள்ளடங்கியுள்ள வட்டி ரூபா 5000 ம் ஆகும். இக்கொடுக்கல் வாங்கல் காரணமாக கணக்கீட்டுச் சமன்பாட்டில் பின்வரும் அடிப்படைகளில் ஏற்படும் தாக்கம் என்ன?

| | பொறுப்பு | உரிமை |
|---|---|---|
| (1) | ரூபா 5 000 ஆல் குறைவடையும் | ரூபா 5 000 ஆல் அதிகரிக்கும் |
| (2) | ரூபா 50 000 ஆல் குறைவடையும் | ரூபா 5 000 ஆல் குறைவடையும் |
| (3) | ரூபா 55 000 ஆல் குறைவடையும் | ரூபா 55 000 ஆல் அதிகரிக்கும் |
| (4) | ரூபா 55 000 ஆல் குறைவடையும் | ரூபா 55 000 ஆல் குறைவடையும் |
| (5) | ரூபா 60 000 ஆல் குறைவடையும் | ரூபா 60 000 ஆல் குறைவடையும் |

(.............)

02. கொடுக்கல் வாங்கலொன்றின் காரணமாக கணக்கீட்டு சமன்பாட்டிற்கு ஏற்பட்ட தாக்கம் பின்வருமாறு.

**சொத்து** - இருப்பு ரூபா 12000 இனால் குறைதல்.

**சொத்து** - காரியாலய உபகரணங்கள் ரூபா 12000 இனால் அதிகரித்தல்.

இக் கொடுக்கல் வாங்கல்களை மிகச் சிறப்பாக விபரிக்கும் கூற்று எது?

(1) ரூபா 12000 பெறுமதியான பல்வேறு இருப்புக்கள் காரியாலய செலவாக பயன்படுத்தப்படல்.
(2) காட்சியறையிலிருந்து களஞ்சிய சாலைக்கு திருப்பப்பட்ட இருப்புக்கள் ரூபா 12000 தைப் பதிவு செய்தல்.
(3) வியாபார இருப்புக்களின் ரூபா 12000 பெறுமதியான உருப்படியொன்று காரியாலய பயன்பாட்டிற்கான உருப்படியொன்றாக வகைப்படுத்தப்படல்.
(4) காரியாலய உபகரணக் கணக்கில் பிழையாகப் பதிவு செய்யப்பட்ட ரூபா 12000 இருப்பானது சரியாகப் பதியப்படல்.
(5) ரூபா 12000 பெறுமதியான காரயாலய உபகரணங்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்படலும் ரூபா 12000 கிரயமுள்ள பண்டங்கள் காசுக்கு விற்பனை செய்யப்படலும்.

(.............)

03. நிரல் X இல் மூல ஏடுகளும் நிரல் Y இல் மூல ஆவணங்களும் காட்டப்பட்டுள்ளன.

| | நிரல் X | | நிரல் Y |
|---|---|---|---|
| 1. | காசேடு | A | இன்வொய்ஸ் (பட்டியல்) |
| 2. | கொள்வனவு நாளேடு | B | குறிப்பேட்டுக் கச்சாத்து |
| 3. | பொதுக் குறிப்பேடு | C | வரவுத் தாள் |
| 4. | உட்திரும்பல் நாளேடு | D | கச்சாத்து |
| 5. | வெளித்திரும்பல் நாளேடு | E | செலவுத்தாள் |

நிரல் X இல் குறிப்பிடப்பட்டுள்ள மூல ஏடுகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற மூல ஆவணங்களை நிரல் Y யுடன் பொருத்தும்போதும் கிடைக்கும் சரியான விடை,

(1) A, D, B, E, C ஆகும்.
(2) B, A, D, E, C ஆகும்.
(3) C, A, B, E, D ஆகும்.
(4) D, A, B, C, E ஆகும்.
(5) D, A, B, E, C ஆகும்.

(.............)

04. பின்வரும் வழுக்களில் பரீட்சை மீதி வெளிக்காட்டும் வழு எது?
(1) காசு விற்பனை ரூபா 15000 ஏடுகளில் முழுமையாக விடுபட்டுள்ளது.
(2) பெற்ற கழிவு ரூபா 4000 கொடுத்த கழிவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.
(3) இயந்திர பழுது பார்த்தல் செலவு ரூபா 25000 இயந்திரக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
(4) உட்திரும்பல் ரூபா 5000 வெளித்திரும்பல் கணக்கில் செலவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
(5) விற்பனைப்பட்டியலில் ரூபா 13000, விற்பனை நாளேட்டில் ரூபா 31000 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
(..............)

05. பின்வரும் கடன் விற்பனைகள் தொடர்பான தகவல்கள் 2015 மார்ச் மாதத்திற்குரியதாகும்.

| கடன்பட்டோர் | பட்டியலிடப்பட்ட விலை (ரூபா 000) | வியாபாரக் கழிவு | காசு செலுத்த வேண்டிய திகதி | காசு செலுத்திய திகதி |
|---|---|---|---|---|
| ஹசீம் | 1000 | 10% | மார்ச் - 15 | மார்ச் - 12 |
| சிசிர | 4000 | 5% | மார்ச் - 20 | மார்ச் - 25 |

உரிய திகதிக்கு முன்னர் பணம் செலுத்தப்படுமாயின் 5% காசுக் கழிவு வழங்கப்படும்.
கடன்பட்டோருக்கு வழங்கிய கழிவினைப் பதிவுசெய்வதற்குரிய சரியான இரட்டைப்பதிவு எது?
(1) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு 45000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு 45000
(2) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு 45000 காசுக்கணக்கு செலவு 45000
(3) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு 50000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு 50000
(4) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு 235000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு 235000
(5) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு 235000 காசுக் கணக்கு செலவு 235000
(..............)

06. "தேறிய எனினும் இன்னும் கிடைக்கப் பெறாத வருமானங்கள் பொறுப்பாக கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்." என்பது பின்வரும் எந்த எண்ணக்கருவுக்கு/ எண்ணக்கருக்களுக்கு பொருத்தமானது?
A - கொள்கை மாறாத B - அட்டுறு C - இணைதல் D - தேறல்
(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும் (4) B, C மட்டும் (5) B, D மட்டும் (..............)

07. அட்டுறு, கால அளவீடு, தேறல் போன்ற எண்ணக்கருக்கள் மூன்றும் பொருத்தமாக அமையும் சந்தர்ப்பம் எது?
(1) ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்தல்.
(2) நிதியாண்டின் இறுதியில் சீராக்குதல்.
(3) விற்பனைக் கிரயத்தைக் கணிப்பதற்கு இறுதி இருப்பினைக் கழித்தல்.
(4) கடன் விற்பனையினை நிதியாண்டின் வருமானமொன்றாக இனம் காணல்.
(5) கணக்காண்டொன்றின் முடிவில் சொத்து, பொறுப்பு தொடர்பான கணக்குகளின் மீதிகளை கீழ் கொண்டு செல்லல். (..............)

08. நிதிக் கூற்றுக்களின் மூலம் முன்வைக்கப்படும் தகவல்களின் நம்பகத் தன்மையை வெளிப்படுத்தும் வகையில் அத்தகவல்களை முன்வைப்பதற்கு,
(1) பூரணத்துவமுடையதாகவும், நடுநிலையும் வழுக்களற்றும் காணப்படல் வேண்டும்.
(2) உறுதிப்படுத்தக்கூடியதாகவும், காலத்திற்கு பொருத்தமானதாகவும் இருத்தல் வேண்டும்.
(3) காலத்திற்குப் பொருத்தமானதாகவும், விளங்கிக் கொள்ளக்கூடியதாகவும் பொருத்தப்பாட்டினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
(4) உறுதிப்படுத்தக்கூடியதாகவும், காலத்திற்கு பொருத்தமானதாகவும் வழுக்களற்றதாகவும் காணப்படல் வேண்டும்.
(5) ஒப்பிடக்கூடியதாகவும், உறுதிப்படுத்தக்கூடியதாகவம் இருத்தல். (..............)

09. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களில் எக்கூற்றானது **சரியானதாகும்**?
(1) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கொன்றில் செலவு மீதியொன்று இருக்க முடியாது.
(2) சகல விற்பனைகளும், விற்பனைத்தினசேரியில் பதிவு செய்யப்படும்.
(3) விற்பனை நாளேட்டின் மொத்தமானது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படும்.
(4) சகல கடன்பட்டோர் தொடர்பிலும் கட்டுப்பாட்டுக் கணக்கொன்று பேணப்பட வேண்டும்.
(5) சகல சந்தர்ப்பங்களிலும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியானது கடன்பட்டோர் பேரேடுகளின் மீதியுடன் சமப்படும்.
(..............)

[பக். 3 ஐப் பார்க்க.

10. கடன்பட்டோரொருவர் தனது ரூபா 50 000 கடனைத் தீர்ப்பதற்கு ரூபா 48 000 காசோலையை வழங்கினார். வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட இக்காசோலை மறுக்கப்பட்டதாக வங்கியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. காசோலை மறுக்கப்பட்டது தொடர்பில் சரியான இரட்டைப்பதிவு எது?

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | கடன்பட்டோர் கணக்கு | வரவு | 48000 | |
| | வங்கிக் கணக்கு | செலவு | | 48000 |
| (2) | வங்கிக் கணக்கு | வரவு | 48000 | |
| | கடன்பட்டோர் கணக்கு | செலவு | | 48000 |
| (3) | வங்கிக் கணக்கு | வரவு | 50000 | |
| | கடன்பட்டோர் கணக்கு | செலவு | | 50000 |
| (4) | கடன்பட்டோர் கணக்கு | வரவு | 48000 | |
| | தொங்கல் கணக்கு | வரவு | 2000 | |
| | வங்கிக் கணக்கு | செலவு | | 50000 |
| (5) | கடன்பட்டோர் கணக்கு | வரவு | 50000 | |
| | வங்கிக் கணக்கு | செலவு | | 48000 |
| | தொங்கல் கணக்கு | செலவு | | 2000 |

(.............)

11. நிமல் பொருள் உற்பத்திக்கான தொழிற்சாலையொன்றையும், அவற்றை விற்பனை செய்வதற்கான வியாபார நிலையமொன்றையும் வெவ்வேறாக நடாத்திச் செல்கின்றார். 2015.03.31 ல் வியாபார நிலையத்தில் ஏற்பட்ட தீ காரணமாக பொருட்களின் இருப்பானது அழிவுற்றது. கணக்கறிக்கையின் படி பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

| | மூலப்பொருட்கள் (ரூபா) | முடிவுப் பொருட்கள் (ரூபா) |
|---|---|---|
| 2014.04.01 ல் இருப்பின் பெறுமதி | 100 000 | 200 000 |
| மூலப்பொருட்களின் கொள்வனவு | 420 000 | - |
| 2015.03.31 இருப்பின் பெறுமதி | 50 000 | - |

- நிதியாண்டில் நேர் பொருளல்லாத உற்பத்திகளில் கிரயம் ரூபா 180 000
- நிதியாண்டிற்கான மொத்த விற்பனை வருமானம் ரூபா 900 000
- வணிகமானது உற்பத்திக்கிரயத்தின் அடிப்படையில் 20% இலாபம் வைத்து பண்டங்களை விற்பனை செய்கின்றது.
- மொத்த உற்பத்திக் கிரயமும் அழிவுற்ற முடிவுப் பொருட்களினதும் பெறுமதியும் முறையே

(1) ரூபா 650 000 , ரூபா 50 000 ஆகும்.
(2) ரூபா 650 000 , ரூபா 100 000 ஆகும்.
(3) ரூபா 650 000 , ரூபா 130 000 ஆகும்.
(4) ரூபா 700 000 , ரூபா 130 000 ஆகும்.
(5) ரூபா 700 000 , ரூபா 100 000 ஆகும். (.............)

▲ **12 ஆம் 13 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

வரையருக்கப்பட்ட அசோக் கம்பனியானது அதனிடமிருந்த லொறியினை 2015.03.31 ல் ரூபா 3000000 இற்கு மீள் மதிப்பீடு செய்தது. இது 2012.09.30 இல் ரூபா 2700000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

- அதன் பயன்படு ஆயுற்காலம் 13 வருடங்கள் எனவும், அதன் இழிவுப் பெறுமதி ரூபா 100000 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.
- நிதியாண்டு மார்ச் 31 ல் முடிவடைகின்றது.

12. 2015.03.31 ல் முடிவடையும் வருடத்திற்கான வருமானக் கூற்றில் காட்டவேண்டிய தேய்வின் பெறுமதியாக அமைவது,
(1) ரூபா 200 000 ஆகும். (2) ரூபா 223 000 ஆகும்.
(3) ரூபா 300 000 ஆகும். (4) ரூபா 500 000 ஆகும்.
(5) ரூபா 800 000 ஆகும். (.............)

13. மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களை கணக்குகளில் பதிவு செய்வதன் மூலம் விரிவான வருமானத்தில் ஏற்படும் தாக்கமாக அமைவது,
(1) ரூபா 100 000 இனால் அதிகரிக்கும். (2) ரூபா 200 000 இனால் அதிகரிக்கும்.
(3) ரூபா 300 000 இனால் அதிகரிக்கும். (4) ரூபா 600 000 இனால் அதிகரிக்கும்.
(5) ரூபா 800 000 இனால் அதிகரிக்கும். (.............)

The National e-Learning Portal for The General Education

[பக். 4 ஐப் பார்க்க.

14. 2014.04.01 இல் ரூபா 60 000 மூலதனமாக இட்டு ஆரம்பிக்கப்பட்ட மகேந்திரன் வணிகமானது முறையாக கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளவில்லை. கணக்கேடுகளிலிருந்து எடுக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.

- 2015.03.31 இல்
  மொத்தச் சொத்துக்கள் ரூபா 800 000 உம் மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 350 000 உம் ஆகும்.
- உரிமையாளர் கணக்காண்டினுள் ரூபா 450 000 பெறுமதியான தனது மோட்டார் வாகனத்தை வணிகத்தில் ஈடுபடுத்தியுள்ளனர்.

இத்தகவல்களின் அடிப்படையில் வணிகத்தின் பெறுபேற்றினை கணிக்கும்போது சரியான நிதிப்பெறுபேறு என்ன?

(1) நட்டம் ரூபா 150 000
(2) இலாபம் ரூபா 300 000
(3) நட்டம் ரூபா 300 000
(4) இலாபம் ரூபா 600 000
(5) நட்டம் ரூபா 600 000 (.............)

15. மகளிர் சங்கமொன்றின் 2014.03.31 ல் உரிமைகள் பின்வருமாறு.

| | ரூபா |
|---|---|
| திரண்ட நிதி | 180 000 |
| கட்டட நிதி | 700 000 |
| ஆயுள் அங்கத்துவக் கட்டணம் | 30 000 |
| | 910 000 |

2015.03.31 ல் முடிவடையும் வருடத்தினுள் கட்டட நிதியினைப் பயன்படுத்தி ரூபா 30 000 இற்கு கட்டடத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதுடன், ஆயுள் அங்கத்துவக் கட்டணத்திலிருந்து ரூபா 10 000 வருமான செலவுக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. மேற் குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் 2015.03.31 ல் முடிவடையும் வருடத்தில் வருமான மிகை ரூபா 20 000 ஆகும்.
2015.03.31 ல் சங்கத்தின் மொத்த உரிமையில் ஏற்பட்ட மாற்றம் என்ன?

(1) ரூபா 10 000 இனால் குறைவடையும்.
(2) ரூபா 10 000 இனால் அதிகரிக்கும்.
(3) ரூபா 20 000 இனால் குறைவடையும்.
(4) ரூபா 20 000 இனால் அதிகரிக்கும்.
(5) ரூபா 30 000 இனால் அதிகரிக்கும். (.............)

The National e-learning Portal for The General Education

16. பங்குடமை வணிகமொன்றின் கணக்கு வைப்புத் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில்சரியான கூற்று /கூற்றுக்கள் எவை?

A பங்குடமை வணிகத்தின் நன்மதிப்பினை மூலதனக் கணக்கினூடாக சீராக்கும்போது மொத்த உரிமையாண்மை உயர்வடையும்.

B பங்குடமை வணிகத்திலிருந்து ஓய்வுபெறுகின்ற பங்காளருக்கு செலுத்தவேண்டிய உரிமையினை கடன் கணக்கிற்கு மாற்றும்போது மொத்த உரிமை குறைவடையும்.

C வணிகத்தின் செலவினை பங்காளர் காசாக செலுத்தும்போது மொத்த உரிமையாண்மையில் எந்த தாக்கமும் ஏற்படாது.

(1) B மட்டுமாகும்.
(2) A, B மாத்திரமாகும்.
(3) A, C மாத்திரமாகும்.
(4) B, C மாத்திரமாகும்.
(5) A, B, C சகலதும். (.............)

17. பங்குடமை வியாபாரக் கட்டளைச் சட்டத்தின் 24 ம் பிரிவில் உள்ளடங்காத கூற்றாக அமைவது,

(1) இலாபநட்டங்கள் சமமாகப் பகிரப்படல் வேண்டும்.
(2) பங்காளருக்கு சம்பளம் பெற முடியாது.
(3) பங்காளரினால் மேற்கொள்ளப்படும் பற்றுக்களுக்கு வட்டி அறவிடப்படல் வேண்டும்.
(4) பங்காளரின் மூலதன மீதிக்கு வட்டி பெற முடியாது.
(5) பங்காளரினால் வணிகத்திற்கு வழங்கப்படும் கடனுக்கு வருடாந்தம் 5% வட்டி வழங்கப்படல் வேண்டும். (.............)

18. வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியொன்று காசுப்பாய்ச்சல் கூற்றினை முன் வைக்கும்போது, நிதிச் செயற்பாட்டின் கீழான காசுப்பாய்ச்சலில் உள்ளடக்கப்படுகின்றவைகளை மாத்திரம் கொண்ட விடை எது?
   (1) பங்கு வழங்கல், கடனைமீளச் செலுத்துதல், கடன் வட்டியினை செலுத்துதல்
   (2) பங்குவழங்கல், வருமான வரி செலுத்துதல், பங்கிலாபம் செலுத்துதல்
   (3) குத்தகை ஆரம்ப வைப்பினை செலுத்துதல், குத்தகைக் கடன் செலுத்துதல், குத்தகை வட்டிக் கொடுப்பனவு
   (4) குத்தகை கடன் கொடுப்பனவை செலுத்துதல், கடன் தொகையொன்றைப் பெறல், பங்கிலாபம் செலுத்துதல்
   (5) கடன் பெறல், பங்கிலாபம் செலுத்துதல், பங்கிலாபம் கிடைத்தல் (.............)

19. வரையறுக்கப்பட்ட சுலோச்சனா பொதுக்கம்பனியின் 2014.03.31 ல் நிதி நிலைமைக் கூற்றிலிருந்து எடுக்கப்பட்ட மீதிகளில் சில பின்வருமாறு,

| | ரூபா |
|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் | 2 500 000 |
| முன்னுரிமைப் பங்கு மூலதனம் (மீட்கத்தக்கது) | 1 000 000 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | 150 000 |
| நிறுத்தி வைத்த உழைப்புக்கள் | 250 000 |

- 2014/2015 ம் வருடத்தில் பங்கொன்று ரூபா 50 வீதம் 10000 ம் சாதாரண பங்குகளும், பங்கொன்று ரூபா 50 வீதம் 20000 ம் முன்னுரிமைப் பங்குகளும் வழங்கப்பட்டு ஒரே முறையில் காசு பெறப்பட்டது.
- 2015.03.31 ல் முடிவடையும் வருடத்தின் இலாபம் ரூபா 180 000 ஆகும்.
- பொது ஒதுக்கத்திற்கு ரூபா 60 000 மாற்றப்படல் வேண்டும்.
- ரூபா 100 000 ஒதுக்கத்தினை மூலதனமாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
- ரூபா 120 000 உரிமை வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- முதன் முறையாக காணி மீள்மதிப்பீட்டினை செய்தபோது ரூபா 90 000 நட்டமேற்பட்டுள்ளது.

மேற்குறிப்பட்ட கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்ததன் பின்னர் உரிமைப் பங்காளர்களின் மொத்த உரிமையின் பெறுமதியாக அமைவது,
   (1) ரூபா 3, 220 000 ஆகும்.
   (2) ரூபா 3, 610 000 ஆகும்.
   (3) ரூபா 3, 400 000 ஆகும்.
   (4) ரூபா 3, 700 000 ஆகும்.
   (5) ரூபா 5, 700 000 ஆகும். (.............)

The National Learning Portal for The General Education

▲ வினா இலக்கம் 20, 21, 22 என்பவற்றிற்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.
வரையறுக்கப்பட்ட துன்ஹிந்த பொதுக் கம்பனியின் இரு வருடங்களுக்கான நிதி நிலைமைக் கூற்றிலிந்து பெயர்த்தெடுக்கப்பட்ட உருப்படிகளில் சில பின்வருமாறு.

| | (ரூபா 000) 2015/03/31 | 2014/03/31 |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் | 6300 | 5000 |
| முன்னுரிமைப் பங்கு மூலதனம் | 2500 | 2500 |
| நிறுத்தி வைத்த உழைப்பு | 450 | 150 |
| கடன் கொடுநர் | 500 | 300 |
| வரி ஒதுக்கம் | 150 | 200 |
| அட்டுரு முன்னுரிமைப்பங்கிலாபம் | 150 | 250 |

**மேலதிகத் தகவல்கள் :**
1. வருடத்தினுள் செலுத்திய வரி ரூபா 400 000 ஆகும்.
2. செலுத்திய சாதாரண பங்கிலாபம் ரூபா 250 000 மும் முன்னுரிமைப் பங்கிலாபம் 500 000 மும் ஆகும்.
3. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீட்டில் ரூபா 80 000 இலாபம் கிடைத்துள்ளதுடன், அது மூலதனமாக்கப்பட்டுள்ளது.
4. வருடாந்தத் தேய்வின் பெறுமதி ரூபா 150 000 ஆகும்.
5. வணிகம் பயன்படுத்திய தளபாடங்கள் ரூபா 200 000 விற்பனை செய்யப்பட்டு அதன் மூலம் ரூபா 50 000 இலாபம் கிடைத்துள்ளது.

20. 2015.03.31 ல் முடிவடையும் வருடத்தின் வரிக்கு முன்னரான இலாபமாக அமைவது,
   (1) ரூபா 300 000 ஆகும்.
   (2) ரூபா 1 050 000 ஆகும்.
   (3) ரூபா 1 100 000 ஆகும்.
   (4) ரூபா 1 300 000 ஆகும்.
   (5) ரூபா 1 450 000 ஆகும்.
   (.............)

[பக். 6 ஐப் பார்க்க.

21. 2015.03.31 ல் முடிவடையும் வருடத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவான தேறிய காசுப் பாய்ச்சலாக அமைவது,
    (1) ரூபா 800 000 ஆகும்.
    (2) ரூபா 1 200 000 ஆகும்.
    (3) ரூபா 1 550 000 ஆகும்.
    (4) ரூபா 1 750 000 ஆகும்.
    (5) ரூபா 1 950 000 ஆகும். (..............)

22. 2015.03.31 ல் முடிவடையும் வருடத்தில் காசும் காசுக்குச் சமமான விடயங்களின் தேறிய அதிகரிப்பாக அமைவது,
    (2) ரூபா 1 950 000 ஆகும்.
    (3) ரூபா 2 220 000 ஆகும்.
    (5) ரூபா 2 420 000 ஆகும்.
    (4) ரூபா 2 500 000 ஆகும்.
    (1) ரூபா 3 170 000 ஆகும். (..............)

23. மொத்த இலாப வீதம் மாற்றமடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை உள்ளடக்கிய சரியான தொகுதி எது?
    (1) விற்பனை விலை, பொருட்களின் கிரயம், விற்பனைக் கலவை, பிழையான இருப்புக் கணிப்பீடு
    (2) விற்பனை விலை, பொருட்ககளின் கிரயம், செயற்பாட்டுச் செலவுகள், பிழையான இருப்புக் கணிப்பீடு
    (3) விற்பனை விலை,, பொருட்களின் கிரயம், பிழையான இருப்புக் கணிப்பீடு, வியாபாரக் கழிவு
    (4) விற்பனை விலை, பொருட்களின் கிரயம், பிழையான இருப்புக் கணிப்பீடு, இருப்பழிவு
    (5) விற்பனை விலை, பொருட்களின் கிரயம், பிழையான இருப்புக் கணிப்பீடு, தேறிய நிகரப் பெறுமதி (..............)

24. வரையறுக்கப்பட்ட டெல்கா பொதுக்கம்பனியின் தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ'000 |
|---|---|
| ஆரம்ப சரக்கிருப்பு | 10 |
| இறுதி சரக்கிருப்பு | 20 |
| விற்பனைக் கிரயம் | 60 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 40 |
| விற்பனை | 90 |
| இறுதி நடைமுறைச் சொத்துக்கள் | 50 |
| இறுதி நடைமுறைப் பொறுப்புக்கள் | 10 |

மேற்குறிப்பிட்ட கம்பனியின் இருப்புப்புரள்வு வீதங்களின் தடவைகள், மொத்த இலாப விகிதம் என்பன முறையே
    (1) 1/4 உம் 50% மும் ஆகும்.
    (2) 2 உம் 50% மும் ஆகும்.
    (3) 3 உம் 50% மும் ஆகும்.
    (4) 4 உம் 33 1/3% மும் ஆகும்.
    (5) 6 உம் 33 1/3% மும் ஆகும். (..............)

25. உற்பத்தி நிறுவனமொன்று உற்பத்தி அலகுகளின் அடிப்படையில் பொது மேந்தலைக் கிரயத்தை உள்ளீர்ப்பதற்கு பயன்படுத்துகின்ற சரியான உள்ளடக்க வீதமாக அமைவது,
    (1) $\frac{\text{பாதீடு செய்ப்பட்ட மொத்த உற்பத்திக்கிரயம்}}{\text{பாதீடு செய்யப்பட்ட வெளியீட்டு அலகுகளின் எண்ணிக்கை}}$
    (2) $\frac{\text{பாதீடு செய்யப்பட்ட உற்பத்தி பொது மேந்தலைக் கிரயம்}}{\text{பாதீடு செய்யப்பட்ட உற்பத்தி அலகுககளின் எண்ணிக்கை}}$
    (3) $\frac{\text{உண்மையுற்பத்திகளின் பொது மேந்தலைக் கிரயம்}}{\text{பாதீடு செய்யப்பட்ட உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை}}$
    (4) $\frac{\text{பாதீடு செய்யப்பட்ட உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை}}{\text{பாதீடு செய்யப்பட்ட உற்பத்தி பொது மேந்தலைக் கிரயம்}}$
    (5) $\frac{\text{உண்மையுற்பத்திகளின் அலகுகளின் எண்ணிக்கை}}{\text{உண்மையுற்பத்திகளின் பொது மேந்தலைக் கிரயம்}}$ (..............)

The National e-learning Portal for The General Education

[பக். 7 ஐப் பார்க்க.

26. "செவன" கூரையோடுகளின் உற்பத்தியாளர்கள் விசேட கூரையோட்டு வகையொன்றினை உற்பத்தி செய்கின்றார்கள். அவ்வுற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்ற மூலப்பொருள் உருப்படியொன்றுக்குரிய தரவுகள் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| இழிவு நுகர்வு நாளொன்றுக்கு | 800 | அலகுகள் |
| சராசரி நுகர்வு நாளொன்றுக்கு | 1000 | அலகுள் |
| ஆகக் குறைந்த கட்டளைக் காலம் | 3 | நாட்கள் |
| சராசரி கட்டளைக் காலம் | 4 | நாட்கள் |
| உச்ச சரக்கிருப்பு மட்டம் | 8000 | அலகுகள் |

இம்மூலப் பொருள் உருப்படிக்கான **மறுகட்டளை மட்டத்தையும், மறு கட்டளைத் தொகையையும்** முறையாகக் காட்டும் விடை (அலகுகளில்)
(1) 4000 மும் 2400 ஆகும்.
(2) 4000 மும் 3200 ஆகும்.
(3) 6000 மும் 3200 ஆகும்.
(4) 6000 மும் 4000 ஆகும்.
(5) 6000 மும் 4400 ஆகும். (.............)

▲ 27 ஆம் 28 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தவும்.
வரையறுக்கப்பட்ட இசுரு கம்பனி 2015 மார்ச் மாதம் தயாரித்த சம்பளப்பட்டியலின் மொத்தக் கூட்டுத் தொகை நிரலிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களில் சில பின்வருமாறு,

| | | (ரூபா 000) |
|---|---|---|
| | அடிப்படைச் சம்ளம் | 240 |
| | கொடுப்பனவுகள் | 60 |
| | மொத்தச் சம்பளம் | 300 |
| **கழிப்பனவு:** | சம்பள முற்பணம் | (20) |
| | ஊழி.சே.நிதி 10% | (30) |
| | தேறிய சம்பளம் | 250 |
| **வேலை வழங்குநரின் பங்களிப்பு** | | |
| | ஊழி.சே.நிதி 15% | 45 |
| | ஊழியர் நம்பிக்கை நிதி 3% | 9 |

சம்பளத்துடன் தொடர்புடைய சகல கொடுப்பனவுகளும் குறிப்பிட்ட மாதத்திற்கு அடுத்து வரும் மாதத்தில் முதலாவது வாரத்தினுள் மேற்கொள்ளப்படும்.

27. இசுறு வணிகத்தின் வருமானக் கூற்றில் காட்டவேண்டிய சம்பளத்துடன் இணைந்ததான மொத்த செலவு,
(1) ரூபா 250 000 ஆகும்.
(2) ரூபா 300 000 ஆகும்.
(3) ரூபா 304 000 ஆகும்.
(4) ரூபா 354 000 ஆகும்.
(5) ரூபா 384 000 ஆகும். (.............)

28. 2015.03.31 ல் நிதி நிலமைக் கூற்றில் சம்பளத்துடன் இணைந்ததாக பொறுப்பாக இனம் காணவேண்டிய மொத்தப் பெறுமதி என்ன?
(1) ரூபா 250 000 ஆகும்.
(2) ரூபா 295 000 ஆகும்.
(3) ரூபா 334 000 ஆகும்.
(4) ரூபா 344 000 ஆகும்.
(5) ரூபா 374 000 ஆகும். (.............)

29. வணிகமொன்றின் 2015 சனவரி, பெப்ரவரி மாதங்களின் ஒருவகைப் பண்டமொன்று தொடர்பிலான தகவல்கள் பின்வருமாறு,
(i)

| | சனவரி (ரூபா) | பெப்ரவரி (ரூபா) |
|---|---|---|
| விற்பனை வருமானம் | 2 000 000 | 3 000 000 |
| இலாபம் | 300 000 | 500 000 |

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியினுள் நிலையான கிரயம், அலகுக்கான மாறும் கிரயம், அலகுக்கான விற்பனை விலை என்பவை மாற்றமடையவில்லை.
பங்களிப்பு விற்பனை விகிதம் எவ்வளவு?
(1) 10%
(2) 20%
(3) 25%
(4) 40%
(5) 50%
(.............)

[பக். 8 ஐப் பார்க்க.

The National e-learning Portal for The General Education

30. முதலீட்டுத் தீர்மானங்களின் மதிப்பீட்டு நுட்பங்களுடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்று எது?
(1) திரும்பிவரும் கால முறையில் பணத்தின் காலப் பெறுமதி கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.
(2) கணக்கீட்டின் விளைவு விகிதத்தினை கணிக்கும்போது காசுப்பாய்ச்சல் கவனத்தில் கொள்ளப்படும்.
(3) தேறிய நிகழ்காலப் பெறுமதியினைக் கணிக்கும்போது பணத்தின் காலப் பெறுமதி கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.
(4) தேறிய நிகழ்காலப் பெறுமதி என்பது பெறுவனவு காசுப் பாய்ச்சலுக்கும், கொடுப்பனவுக் காசுப்பாய்ச்சலுக்கும் இடையிலான வேறுபாடாகும்.
(5) திரும்பிவரும் கால முறையில் திரும்பிவரும் காலத்தின் பின்னரான காசுப்பாய்ச்சல் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படும்.

(..............)

31. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா? பொய்யா? என்பதை வெற்றிடத்தில் எழுதுங்கள்.

உண்மை/பொய்

(அ) பணவீக்க நிலமை காணப்படுகின்றபோது இருப்பின் கிரயத்தைக் கணிப்பதற்கு முதல் உள் முதல் வெளி முறை (FIFO) யினைப் பயன்படுத்திக் கணிக்கும்போது இறுதியிருப்பு கூடுதலான பெறுமதியினைக் காட்டும். ........................

(ஆ) தொழிற்சாலையினை ஒளியூட்டுவதற்கு ஏற்படுகின்ற மின்கட்டணச் செலவினை ஒரு மின் கட்டணப்பட்டியலினூடாக செலுத்திய பின்னர் அதனை ஒவ்வொரு திணைக்களத்திற்கும் பகிர்வு செய்வதற்கு தளப் பரப்பளவினை அடிப்படையாகப் பயன்படுத்துவது பொருத்தமானது. ........................

(இ) கைவிரல் அடையாள இயந்திரமானது நிறுவனமொன்றின் செயற்பாட்டுக் காலத்தை அறிக்கைப் படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. ........................

(ஈ) தொழிற்சாலைக் கட்டடத்தை காப்புறுதி செய்வதற்கு ஏற்படுகின்ற கிரயமானது ஒரு மாறும் கிரயமாகும். ........................

32. ஆடைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்றுடன் தொடர்புடைய பின்வரும் கிரய உருப்படிகள் முதற் கிரயத் தொகுதியா அல்லது உற்பத்தி பொது மேந்தலைக் கிரயத் தொகுதியா என்பதைக் குறிப்பிடுக.

| **கிரய உருப்படிகள்** | **முதற்கிரயம்/உற்பத்தி பொது மேந்தலை** |
|---|---|
| (அ) தையல் இயந்திர பராமரிப்புக் கிரயம் | ........................................................................ |
| (ஆ) தையல் இயந்திர இயக்குநர் கூலி | ........................................................................ |
| (இ) பயன்படுத்தப்பட்ட துணிகளுக்கான கிரயம் | ........................................................................ |
| (ஈ) மேற்பார்வையாளர் சம்பளம் | ........................................................................ |

33. வணிகமொன்றில் 2015.03.31 இல் முடிவடையும் வருடத்தில் கணிக்கப்பட்ட இலாபம் ரூபா 58000 ஆகும். பின்னர் பின்வரும் வழுக்கள் நிகழ்ந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. (இந்நிறுவனம் கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பேணுவதில்லை.)
(i) ரூபா 4600 பெறுமதியான விற்பனைப்பட்டியலொன்று விற்பனை தினசேரியில் ரூபா 6400 எனப் பதிவு செய்யப்பட்டிருந்தது.
(ii) கொள்வனவுத் தினசேரியின் கூட்டுத்தொகை ரூபா 4000 ஆல் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(அ) வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளை எழுதிக் காட்டுக. (விளம்பல் அவசியமில்லை.)
....................................................................................................................................
....................................................................................................................................
....................................................................................................................................
....................................................................................................................................
....................................................................................................................................

(ஆ) வழுக்களைத் திருத்திய பின்னர் இலாபம் எவ்வளவு ..........................................................................

34. 2014 பெப்ரவரி 01 ல் வணிகமொன்றின் சில்லறைக் காசு மீதி 470 ஆகும். அத்திகதியில் ரூபா 1530 காசு மீள்நிரப்பப்பட்டது. பெப்ரவரி மாதத்திற்கான சில்லறைச் செலவுகள் பின்வருமாறு.

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| தபால் கட்டணம் | 300 | சுத்திகரிப்புச் செலவு | 400 |
| காகிதாதிகள் செலவு | 400 | பல்வேறு செலவுகள் | 300 |
| போக்குவரத்துக் கட்டணம் | 300 | | |

மார்ச் மாதத்திற்கான சில்லறைக் காசுக் கட்டுநிதியினை ரூபா 500 வினால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது
(அ) பெப்ரவரி மாத முடிவில் மீள் நிரப்பவேண்டிய காசு எவ்வளவு? ..............................................

[பக். 9 ஐப் பார்க்க.

The National e-learning Portal for the General Education

(ஆ) சில்லறைக் காசேட்டிலுள்ள **பல்வேறு செலவுகளின்** பகுப்பாய்வு நிரலின் கூட்டுத்தொகையினைப் பதிவு செய்வதற்கான இரட்டைப் பதிவினைத் தருக.

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

35. பொது நோக்க நிதிக்கூற்றுக்களும், விசேட நோக்க நிதிக் கூற்றுக்களுக்குமிடையே காணப்படுகின்ற இரு வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

(i) ........................................................................................................................

........................................................................................................................

(ii) ........................................................................................................................

........................................................................................................................

36. விளையாட்டுக்கழகமொன்றின் 2015.03.31 ல் முடிவடையும் வருடத்தின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை அங்கத்தவர் எண்ணிக்கை 50 ஆகும். வருட அங்கத்தவக் கட்டணம் ரூபா 1000 ஆகும்.

| | 2015.03.31 யில் | 2014.03.31 யில் |
|---|---|---|
| அங்கத்துவக் கட்டணம் செலுத்தாக அங்கத்தவர் எண்ணிக்கை | 04 | 03 |
| முற்பணமாக சந்தா செலுத்திய அங்கத்தவர்கள் எண்ணிக்கை | - | 01 |

ஒரு அங்கத்தவரின் மேற்குறிப்பிட்ட இரு வருடங்களுக்குமான சந்தா நிலுவையாகக் காணப்பட்டதுடன், 2015.03.31 ல் அவரின் அங்கத்துவம் இரத்துச் செய்யப்பட்டது.

வருடத்தினுள் காசாக கிடைக்கப்பெற்ற சந்தாக் கட்டணம் எவ்வளவு?

37. பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்ட கம்பனியின் நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும்போதும் முன்வைக்கும்போதும் அப் பொறுப்பை ஏற்கும் பக்கத்தினரையும் அந்நிலையில் எண்ணக்கரு மற்றும் சட்டகத்திற்கேற்ப பயன்படுத்தப்படும் முக்கிய எடுகோளினையும் குறிப்பிடுக.

........................................................................................................................

........................................................................................................................

38. வரலாற்றுக் கிரய எண்ணக்கருவானது, பாதுகாப்பு எண்ணக்கருவுடன் பொருந்தாத இரு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(i) ........................................................................................................................

........................................................................................................................

(ii) ........................................................................................................................

........................................................................................................................

▲ **39 ம் 40 ம் 41 ம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

- பங்குடமை வணிகமொன்றை நடாத்திச் செல்லும் அனுராதா, சுஜாதா, கருணாவதி என்போர் தம்மிடையே ஏற்படுத்திக் கொண்ட பங்குடமை ஒப்பந்தத்திற்கேற்ப இலாப நட்டங்களை முறையே 3:2:1 என்ற விகிதத்தில் பகிர்வதற்கும் அவர்களின் ஆரம்ப மூலதன மீதிக்கு 5% வருடாந்த வட்டியினைச் செலுத்துவதற்கும் இணங்கினர். மூலதன வட்டிகள் முழுவதும் காசாக செலுத்தப்பட்டதுடன் அது முறையே அனுராதா ரூபா 60 000, சுஜாதா ரூபா 50 000 கருணாவதி ரூபா 35 000 ஆகும்.
- 2014.04.01 ல் மொத்த உரிமைகள் முறையே அனுராதா ரூபா 1240 000 சுஜாதா ரூபா 990 000 கருணாவதி ரூபா 735 000 ஆகும்.
- 2015.03.31 ல் முடிவடையும் நிதியாண்டினுள் வணிகமானது ரூபா 405 000 வை தேறிய இலாபமாக பதிவு செய்திருந்தாலும், சுஜாதாவினால் தனிப்பட்டமுறையில் மேற்கொள்ளப்பட்ட வணிகத்தின் வாகன பழுதுபார்த்தல் செலவு ரூபா 20 000 கணக்குகளில் பதிவு செய்யப்படவில்லை.
- 2015.03.31 ல் சுஜாதா பங்குடமை வணிகத்திலிருந்து ஓய்வு பெறுவதற்கும், வணிகத்தின் நன்மதிப்பினை அத்தினத்தில் ரூபா 900 000 வாக கணிப்பிட்டு மூலதனக் கணக்கினூடாக சீராக்குவதற்கும், அனுராதாவும், கருணாவதியும் 2:1 எனும் விகிதத்தில் இலாப நட்டத்தை தொடர்ந்து பகிர்ந்து கொள்வதற்கும் இணங்கினர்.
- சுஜாதாவிற்குச் செலுத்தவேண்டிய உரிமையானது அவரது கடன் கணக்கிற்கு மாற்றப்படல் வேண்டும்.

39. 2015.03.31 ல் பின்வரும் பங்காளர்களின் நடைமுறைக்கணக்குகளின் மீதிகளைக் காட்டுக.

- அனுராதா .....................................
- கருணாவதி .....................................

40. 2015.03.31 பின்வரும் பங்காளர்களின் மூலதனக் கணக்குகளின் மீதிகளைக் காட்டுக.

- அனுராதா .....................................
- கருணாவதி .....................................

[பக். 10 ஐப் பார்க்க.

The National e-learning Portal for the General Education

41. 2015.03.31 சுஜாதாவின் கடன் கணக்கிற்கு மாற்றவேண்டிய தொகை ரூபா ......................... ஆகும்.

42. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா? பொய்யா என்பதை அதன் முன்னாலுள்ள இடைவெளியில் குறிப்பிடுக.
A - ஒதுக்கங்களை மூலதனமாக்குவதனால் உரிமையாண்மையில் மாற்றமேற்படாது. (..................)
B - சாதாரண பங்குகளுக்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபமானது உரிமை மாற்றல் கூற்றில் காட்டப்படும் (..................)
C - நிதி நிலமைக் கூற்றில் காசும் காசுக்கு சமமானவைகளும் என்பதில் வங்கி மேலதிகப்பற்றும் உள்ளடக்கப்படும். (..................)
D - எதிர்வரும் வருடத்திற்கு செலுத்தவேண்டிய வட்டியுடன் குத்தகைக் கடன் கொடுநர் தவணைக் கட்டணமும் பொறுப்பாகக் காட்டப்படல் வேண்டும். (..................)

43. 2015.03.31 ல் வரையறுக்கப்பட்ட மலையக பொதுக் கம்பனியின் பரீட்சை மீதியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மீதிகளும் மேலதிகத் தகவல்களும் பின்வருமாறு.

| | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| காணி மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | - | 150 000 |
| காணி | 900 000 | |

மேலதிகத் தகவல்கள் :
- இவ்வருடத்தில் காணியானது ரூபா 700 000 க்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டது.

வேண்டப்படுவது :

(அ) இக்கொடுக்கல் வாங்கலினைப் பதிவு செய்வதற்கான இரட்டைப் பதிவு

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

(ஆ) ஏனைய விரிவான வருமானங்களின் பொழிப்பு

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

44. வரையறுக்கப்பட்ட நாட்டான் பொதுக் கம்பனியானது 2015.03.31 ல் முடிவடையும் வருடத்திற்காக பின்வரும் தகவல்களை வழங்குகின்றது.

| | | (ரூபா'000) |
|---|---|---|
| கூட்டிணைக்கப்பட்ட மூலதனம் : | சாதாரண பங்குகள் | 4000 |
| | ரூபா 2/= முன்னுரிமைப் பங்குகள் | 1000 |
| ஒதுக்கங்கள் | | 2000 |
| 10% தொகுதிக்கடன் | | 500 |
| விற்பனை | | 4500 |
| விற்பனைக் கிரயம் | | 3000 |

மேலதிகத் தகவல்கள் : (1) வரிக்கு முன்னரான இலாபம் உரிமையாளரின் உரிமையில் 10% ஆகும்.
(2) உரிமையாண்மையின் 1.5 மொத்தச் சொத்துக்களாகும்.

பின்வருவனவற்றைக் கணிக்க.

(அ) வட்டிப்பாதுகாப்பு வீதம் ..............................

(ஆ) சொத்துப் புரள்வு வீதம் ..............................

45. இலங்கை கணக்கீட்டு நியமம் 37 (ஒதுக்கங்கள், நிகழத்தக்க பொறுப்புக்களும், நிகழத்தக்க சொத்துக்களும்) ஏற்ப நிகழத்தக்க பொறுப்புக்களின் இனம் காணக்கூடிய இரு பண்புகளைக் குறிப்பிடுக.

1. ..........................................................................................................................................

2. ..........................................................................................................................................

The National e-learning Portal for The General Education

- **வினா இலக்கம் 46 , 47 ம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

உற்பத்தி நிறுவனமொன்று X, Y எனும் இருவகை பண்டங்களை உற்பத்தி செய்கின்றது. அந்நிறுவனத்தின் இயந்திரத் திணைக்களத்தின் மதிப்படப்பட்ட பொது மேந்தலைக் கிரயம் ரூபா 1 500 000 ஆகும்.
ஏனைய தகவல்கள் பின்வருமாறு.

(i)

| பண்டங்கள் | இயந்திர மணித்தியாலங்கள் | | உத்தேச வெளியீட்டு அலகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட | உண்மை | |
| X | 5 | 4 | 500 |
| Y | 10 | 8 | 500 |

(ii) பொது மேந்தலைக் கிரயமானது இயந்திர மணித்தியாலங்களின் அடிப்படையில் உள்ளீர்க்கப்படும்.

46. X பண்ட அலகொன்றிற்கு ஒரு இயந்திர மணித்தியாலத்திற்கு உள்ளடக்கப்படவேண்டிய பொது மேந்தலைக் கிரயம் எவ்வளவு? ..........................................................................................................

47. பண்டம் Y யிற்கு இயந்திரத் திணைக்களத்திலிருந்து உள்ளடக்கவேண்டிய பொது மேந்தலைக் கிரயத்தின் பெறுமதி எவ்வளவு? ..........................................................................................................

48. வணிகமொன்றின் உற்பத்தியொன்றுடன் தொடர்புடைய தகவல்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| அலகொன்றின் விற்பனை விலை | ரூபா 500 |
| பங்களிப்பு விற்பனை விகிதம் | 20% |
| எதிர்பார்த்த இலாபம் | ரூபா 3 000 000 |
| எதிர்பார்ப்பு இலாபத்தின்போது விற்பனை அலகுகளின் எண்ணிக்கை | 22 000 |

நிலையான கிரயம் எவ்வளவு? ..........................................................................................................

49. கிரய இலாப அளவுப் பகுப்பாய்விற்கேற்ப பின்வரும் வெற்றிடங்களின் "குறையும்" "அதிகரிக்கும்" என்பதைக் குறிப்பிடுக.

| | **சமப்பாட்டு புள்ளி** | **பாதுகாப்பு எல்லை** |
|---|---|---|
| (i) நிலையான கிரயம் அதிகரிக்கும்போது | ........................ | ........................ |
| (ii) விற்பனை விலை குறையும்போது | ........................ | ........................ |

50. கம்பனியொன்று புதிய செயற்றிட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கின்றது. அதற்காகக் காணப்படுகின்ற பல்வேறு மாற்று வழிகளும், அவற்றின் தேறிய நிகழ்காலப் பெறுமதியும் (NPV) கீழே தரப்பட்டுள்ளது. (இச் சகல செயற்றிட்டங்களினதும் ஆரம்ப முதலீடானது சமமான பெறுமதியினைக் கொண்டது.)

| **செயற்றிட்டம்** | **தேறிய நிகழ்காலப் பெறுமதி (NPV)** |
|---|---|
| A | 150 000 |
| B | (50 000) |
| C | 0 |
| D | 200 000 |

(அ) கம்பனி தெரிவுசெய்ய வேண்டிய செயற்றிட்டம் எது?
..........................................................................................................

(ஆ) அச் செயற்றிட்டத்தை ஏன் தெரிவுசெய்ய வேண்டும்.
..........................................................................................................
..........................................................................................................

* * *

The National e-learning Portal for The General Education

# க.பொ.த. (உ.தர) உதவிக் கருத்தரங்கு - 2015

## 33 - கணக்கீடு II

3 மணித்தியாலங்கள்

**கவனிக்க வேண்டியவை :**

★ **1ஆம் 2ஆம்** வினா உட்பட **ஆறு** வினாக்களுக்கு **மாத்திரம்** விடையளிக்க.

1. மின்சார உபகரணங்களையும் கருவிகளையும் விற்பனை செய்யும் **வரையறுக்கப்பட்ட விஸ்கம் பொதுக் கம்பனியின்** 2015.03.31ல் உள்ளவாறான பரீட்சை மீதி பின்வருமாறு

| | வரவு(ரூ'000) | செலவு(ரூ'000) |
|---|---|---|
| 2014.04.01 ல் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் (கிரயத்தில்) | | |
| காணி | 16 000 | |
| கட்டடம் | 5 000 | |
| மோட்டார்வாகனம் | 4 200 | |
| கணினி முறைமை | 600 | |
| 2014.04.01 ல் திரண்ட தேய்வு | | |
| கட்டடம் | | 1 500 |
| மோட்டார் வாகனம் | | 1 260 |
| கணினி முறைமை | | 120 |
| விற்பனைகள் | | 19 300 |
| விற்பனைக் கிரயம் | 12 000 | |
| வியாபாரம் பெறவேண்டியவைகள் | 1 240 | |
| செலுத்திய வருமான வரி | 175 | |
| 10% வங்கிக் கடன் | | 1 200 |
| குத்தனை வைப்புக் கணக்கு | 300 | |
| விளம்பரச் செலவு | 200 | |
| 2015.03.31 ல் இருப்பு (கிரயத்தில்) | 350 | |
| வியாபாரம் செலுத்தவேண்டியவைகள் | | 1 650 |
| சம்பளமும் கூலியும் | 1 800 | |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் (ஒன்று ரூ. 20 படி 500000 பங்குகள்) | | 10 000 |
| செலுத்திய பங்கிலாபம் | 500 | |
| 2014.04.01 ல் மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | | 700 |
| 2014.04.01 இல் நிறுத்தி வைத்த உழைப்பு | | 7 500 |
| கழிவுகள் | 50 | 120 |
| 2014.04.01 ல் ஐயக்கடன் ஏற்பாடு | | 100 |
| விற்பனைத் தரகு | 20 | |
| இயக்குநர் எரிபொருள் தொலைபேசிக் கட்டணக் கொடுப்பனவு | 175 | |
| கணக்காய்வு கட்டணம் | 60 | |
| நன்கொடை | 30 | |
| காசு மீதி | 895 | |
| வங்கி மேலதிகப் பற்று | | 145 |
| | 43 595 | 43 595 |

The National e-Learning Portal for The General Education

**மேலதிகத் தகவல்கள் :**

2015.03.31 முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முன்னர் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(i) 2015.03.31 ல் இருப்பின் கிரயமானது **முதல் வந்து முதல் வெளிச் செல்லல்** (FIFO) முறையில் கணிப்பிடப்பட்டுள்ளது.

(ii) 2015.03.31 ல் வியாபாரம் பெறவேண்டிய தொகையில் ரூபா 80 000 பெறுமதியான கடன்பட்டோர் ஒருவர் 2015.04.10 ல் முறிவடைந்தவரானார். கடனை விடுவிக்கும்போது கடன்பட்டோர் பெறுமதியில் 50% த்தை மாத்திரம் அறவிட்டுக்கொள்ள முடியுமென நம்பப்படுகின்றது. எஞ்சிய கடன்பட்டோரில் 10% த்தினை ஐயக்கடனாக ஏற்பாடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(iii) கம்பனி 2014.10.01 ல் தனது பண்டங்களை விளம்பரம் செய்வதற்கு விளம்பர நிறுவனமொன்றுடன் 2 வருட ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. இரண்டு வருடங்களுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 200 000 செலவொன்றாக ஏடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(iv) சகல ஆதனம் பொறி உபகரணங்களும் கிரயத்தில் 10% ம் நேர்கோட்டு முறையில் தேய்விடப்படல் வேண்டும் அத்துடன், இவை நிர்வாக நடவடிக்கைகளுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றது.

(v) 2014.10.01 ல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4 00 000 பெறுமதியான கணினி, கொள்வனவுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(vi) 2014.04.01 ல் ரூபா 1 500 000 பெறுமதியான இயந்திரமொன்று 4 வருடங்களுக்கான நிதிக் குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் கையேற்கப்பட்டது. ஆரம்ப வைப்பாக ரூபா 300 000 செலுத்தப்பட்டுள்ளதுடன், அத்தொகையானது குத்தகை வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருட முடிவிலும் குத்தகை வட்டி ரூபா 100 000 உட்பட ரூபா 400 000 குத்தகை தவணைக் கட்டணமாகச் செலுத்தப்படல் வேண்டும். நடைமுறையாண்டில் செலுத்தப்பட்ட குத்தகை தவணைக்கட்டணம் வங்கிக் கடன் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. வங்கிக் கடனானது 2014.10.01 ல் பெறப்பட்டது.

(vii) கம்பனிக்கு சொந்தமான காணியின் முன்னால் அதிவேகப்பாதையொன்று அமைக்கப்பட்டமையினால் அக்காணிக்கு உட்பிரவேசிக்கும் பாதை அற்றுப்போனது 2015.03.31 ல் காணியினை மீள் மதிப்பீடு செய்தபோது ரூபா 1 000 000 நட்டமொன்று ஏற்பட்டது. 2010.03.31 ல் காணி மீள் மதிப்பீட்டின்போது ஏற்பட்ட மிகையானது மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்தில் காட்டப்பட்டுள்ளது.

(viii) வணிகத்திற்கு சொந்தமான கட்டடமானது 2015.03.31 ல் முதன்முதலாக ரூபா 4 500 000 க்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டது.

(ix) 2014/2015 இற்கான வருமான வரி ரூபா 220 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(x) ஊழியர் சேமலாபநிதிக்கான வேலை வழங்குநர், ஊழியர் பங்களிப்பு மொத்தச் சம்பளம் கூலிகளில் முறையே 15% உம் 10% உம் ஆகும். அத்துடன் ஊழியர் நம்பிக்கை நிதிப்பங்களிப்பு 3% ஆகும். சம்பளமும் கூலியும் கணக்கில் ஊழியர் பங்களிப்புத் தொகையை கழித்த பின்னருள்ள சம்பளமே காட்டப்பட்டுள்ளது.

(xi) 2015.03.31 ல் நிறுத்தி வைத்த உழைப்பினைப் பயன்படுத்தி சாதாரண பங்குகள் **ஐந்துக்கு ஒரு பங்கு என்றவாறு ஒதுக்கங்கள் மூலதனமாக்கப்பட்டன.**

(xii) 2015.03.31 ல் இயக்குநர்கள் பின்வரும் தீர்மானங்களை எடுத்துள்ளனர்.

* ரூபா 1 500 000 பங்கிலாபத்தினை சாதாரண பங்குகளுக்கு செலுத்துவதற்கு முன்மொழிதல்.
* நிறுத்தி வைத்த உழைப்புக்களில் ரூபா 300 000 வினை பொது ஒதுக்கதத்திற்கு மாற்றுதல்.

வேண்டப்படுவது :

வரையறுக்கப்பட்ட **விஸ்கம் பொதுக்கம்பனியின்** பிரசித்தப்படுத்தலுக்கான பின்வரும் நிதிக் கூற்றுக்கள் (குறிப்புக்களுடன்)

1. 2015.03.31 ல் முடிவடையும் வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டத்தினை காட்டும் விரிவான வருமானக் கூற்று.
2. 2015.03.31 ல் முடிவடையும் வருடத்திற்கான உரிமைமாற்றல் கூற்று.
3. 2015.03.31 ல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று.

**(20 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education

2. (அ) இலாபத்தை சமமாகப் பகிர்ந்து கொள்ளும் **அகிலன், விராஜ்** பங்குடமையில் **காரியவசம்** என்பவர் புதிய பங்காளராக 2014.04.01 ம் திகதி இணைத்துக் கொள்ளப்பட்டார்.பயிலுநர் கணக்கு எழுதுவினைஞர் ஒருவரினால் 2015.03.31 முடிவடையும் வருடத்திற்கு தயாரிக்கப்பட்ட கணக்குகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்களில் சில பின்வருமாறு.

| | | | (ரூபா) | (ரூபா) |
|---|---|---|---|---|
| **2014.04.01 ல் மீதி** | | | **வரவு** | **செலவு** |
| மூலதனக் கணக்கு | - | அகிலன் | - | 350 000 |
| | - | விராஜ் | - | 250 000 |
| நடைமுறைக் கணக்கு | - | அகிலன் | - | 12 000 |
| | - | விராஜ் | 8 000 | |
| 2015.03.31 ல் இருப்பு | | | 80 000 | |
| காரியவசமிடம் பெற்ற கடன் | | | | 50 000 |
| பகிர்வுக்கு முன்னரான இலாபம் | | | | 250 000 |

இலாபக் கணிப்பீட்டின்போது பின்வரும் குறைபாடுகள் நிகழ்ந்துள்ளமை உள்ளகக் கணக்காய்வின்போது தெரிய வந்தது.

1. காரியவசத்தின் கடனுக்கான வருட வட்டி ரூபா 5 000 பதிவு செய்யப்படவில்லை.
2. பங்காளர் மேற்கொண்ட பற்றுக்கள் முறையே அகிலன் ரூபா 10 000, விராஜ் ரூபா 8 000 என்பன செசலவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.
3. 2015.03.31 ல் இருப்பானது ரூபா 24 000 இனால் மிகையாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.
4. **காரியவசம்** 2014.10.01 ல் அவரிடமிருந்த ரூபா 160 000 பெறுமதியான களஞ்சியக் கட்டடமொன்றினை வணிகத்திற்கு வழங்கியதுடன், அத்திகதியிலிருந்து வருடாந்தம் ரூபா 12 000 வாடகைக்கு அதனை வழங்கி இரண்டு வருடங்களுக்கான வாடகை வருமானத்தினைப் பெற்றதுடன், அதில் ஒரு வருடத்திற்கான வாடகையானது இலாபத்தில் சீராக்கப்பட்டுள்ளது.
5. 2014.04.01 ல் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் ரூபா 100 000 ஆக இருந்ததுடன், ரூபா 200 000 பெறுமதியான உபகரணங்கள் 2014.10.01 ல் கையேற்கப்பட்டுள்ளன. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களுக்கு வருடாந்தம் கிரயத்தில் 10% தேய்விடப்படல் வேண்டும்.

பின்வரும் மேலதிகத் தகவல்களும் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

A காரியவசம் 2014.04.01 ல் ரூபா 150 000 வை மூலதனமாகக் கொண்டு வந்ததுடன், அத்திகதியில் நன்மதிப்பானது ரூபா 90 000 மதிப்பிடப்பட்டு அதற்கான சீராக்கங்களை மூலதனக் கணக்கில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

B காரியவசத்தின் மூலதனத்திற்கு 10% வருட வட்டி உறித்தாவதுடன் 2015.03.31 வரை அவருக்கு மூலதன வட்டி செலுத்தப்படவில்லை.

C காரியவசத்தின் கடன் கணக்கினை 2015.03.31 இலிருந்து அவரின் மூலதனக் கணக்கிற்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

D 2015.03.31 ல் அகிலன், விராஜ் என்போரின் மூலதன வட்டி சம்பளம் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| | **அகிலன்** | **விராஜ்** |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| செலுத்திய மூலதன வட்டி | 12 000 | 10 000 |
| செலுத்தவேண்டிய மூலதன வட்டி | 23 000 | 15 000 |
| செலுத்திய சம்பளம் | 30 000 | 20 000 |
| செலுத்தவேண்டிய சம்பளம் | 15 000 | 15 000 |

**வேண்டப்படுவது :** 1. இலாபத்தை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள் (விளம்பல் அவசியமற்றது.)
2. 2015.03.31 ல் முடிவடையும் வருடத்திற்கான இலாப நட்டத்தினை பகிர்வு செய்யும் முறை.
3. 2015.03.31 ல் முடிவடையும் வருடத்திற்கான பங்காளரின் நடைமுறைக் கணக்குகளும், மூலதனக் கணக்குகளும்.

**(10 புள்ளிகள்)**

The National e-Learning Portal for The General Education

(ஆ) வரையறுக்கப்பட்ட **விஜய உற்பத்திக் கம்பனியானது** விளையாட்டு மோட்டார் கார்களையும் (C), ஜீப் வண்டி (J) என்பவற்றை உற்பத்தி செய்கின்றது. அதற்காக முடிவுருத்துதல், பொதியிடல் என்ற இரு உற்பத்தித் திணைக்களங்களும் சிற்றூண்டிச் சாலையொன்றும் காணப்படுவதுடன், கட்டட இலக்கம் 01 ல் முடிவுருத்துதல் திணைக்களமும், கட்டட இலக்கம் 02ல் பொதியிடல் திணைக்களமும், சிற்றூண்டிச் சாலையும் அமைக்கப்பட்டுள்ளன சகல இயந்திரங்களும் முடிவுருத்தல் கருமங்களுக்காகவே பயன்படுத்தப்படுகின்றன.

- 2015.03.31 ல் முடிவடைந்த இறுதிக் காலாண்டுக்கான மதிப்பிடப்பட்ட பொது மேந்தலைக் கிரயம் பின்வருமாறு.

| | ரூ'000 |
|---|---|
| இயந்திர பழுதுபார்த்தல் செலவு | 800 |
| மின்சாரச் செலவு (இயந்திர இயக்கத்திற்கு) | 360 |
| மின்சார செலவுகள் (வெளிச்சம்) | 1 200 |
| இயந்திர பெறுமானத் தேய்வு | 500 |
| சிற்றூண்டிச் சாலை செலவுகள் (உணவு) | 270 |
| கட்டட வாடகை - கட்டட இலக்கம் (1) | 100 |
| கட்டட இலக்கம் (2) | 400 |
| ஊழியர் சம்பளம் | 450 |
| பாதுகாப்புச் சேவைக்கான செலவுகள் | |
| - கட்டட இலக்கம் (1) | 80 |
| கட்டட இலக்கம் (2) | 140 |

**மேலதிகத் தகவல்கள் :**

| உருப்படி | முடிவுருத்துதல் | பொதியிடல் | சிற்றுண்டிச்சாலை |
|---|---|---|---|
| இயந்திரம் - கிரயம் (ரூபா'000) | 1 000 | - | - |
| ஊழியர் எண்ணிக்கை | 10 | 30 | 5 |
| தள அளவு (சதுர அடி) | 2 000 | 3 000 | 1 000 |
| இயந்திர மணித்தியாலம் | 5 000 | - | - |
| ஊழிய மணித்தியாலம் | 5 000 | 12 000 | 1 000 |

- பொது மேந்தலைக் கிரயத்தின் உள்ளடக்கமானது இயந்திர திணைக்களத்திற்கு இயந்திர மணித்தியாலத்தின் அடிப்படையிலும், முடிவுருத்துதல் திணைக்களத்திற்கு ஊழிய மணித்தியாலத்தின் அடிப்படையிலும் உள்ளடக்கப்படும்.
- காலாண்டுக்குரிய மதிப்பிடப்பட்ட கிரயத்தகவல்கள் பின்வருமாறு.

| | மோட்டார் கார் (C) | ஜீப் வண்டி (J) |
|---|---|---|
| மூலக் கிரயம் (ரூபா) | 1050 | 1200 |
| இயந்திர மணித்தியாலம் | 2 | 1 |
| ஊழியர் மணித்தியாலம் | 1 | 2 |

- கட்டடம் 02 ல் பாதுகாப்பு ஊழியர்கள் ஏனைய ஊழியர்களில் பாதுகாப்பிற்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**வேண்டப்படுவது :**

1. பகிர்வு அடிப்படைகளைக் குறிப்பிட்டு, பொது மேந்தலைக் கிரய பகுப்பாய்வுப் பத்திரம்,
2. சிற்றுண்டிச் சாலையின் பொது மேந்தலைக் கிரயத்தினை பொருத்தமான அடிப்படையினைப் பயன்படுத்தி மீள் பகிர்வு செய்தல்,
3. ஒவ்வொரு உற்பத்தித் திணைக்களத்தினதும் பொது மேந்தலை உள்ளடக்க வீதம்,
4. விளையாட்டு மோட்டார் கார் (C), ஜீப் வண்டி (J) என்பவற்றின் உற்பத்திக் கிரயம்,

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education

3. **(அ)** 2015.01.01 ல் மோட்டார் வாகனம் பழுது பார்த்தலுக்காக ஆரம்பிக்கப்பட்ட **டில்சான் வணிகத்தில்** அத்திகதியில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு,

1. டில்சான் காசாக ரூபா 300 000 யையும், ரூபா 300 000 பெறுமதியான மோட்டார் வாகன பழுதுபார்த்தல் உபகரணங்களையும் வணிகத்தில் ஈடுபடுத்தினார்.
2. வருடத்திற்கு வாடகை முற்பணமாக ரூபா 160 000 செலுத்தி கட்டடமொன்று வாடகைக்கு பெறப்பட்டது.
3. ரூபா 100 000 பெறுமதியான மோட்டார் வாகன பழுதுபார்த்தல் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

2015.03.31 ல் முடிவடைந்த காலாண்டிலினுள் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

4. பழுது பார்த்தல் சேவையினை வழங்கியதன் மூலம் ரூபா 320 000 வருமானமாகப் பெறப்பட்டதுடன் இதில் ரூபா 100 000 2015.03.31 ல் கிடைக்க வேண்டியுள்ளது.
5. மோட்டார் வாகனப் பழுது பார்த்தல் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக காசாக ரூபா 40 000 செலுத்தப்பட்டுள்ளதுடன், 2015.03.31 ல் ரூபா 20 000 செலுத்தவேண்டியுள்ளது.
6. மின்சாரம், நீர்க் கட்டணம் என்பவற்றிற்கு காலாண்டிலினுள் ரூபா 27 000, ரூபா காசாக செலுத்தப்பட்டுள்ளது.
7. ஊழியர் சம்பளம் மாதம் ரூபா 10 000 வீதம் செலுத்தப்பட்டுள்ளது.
8. பழுது பார்த்தல் உபகரணங்களுக்கு நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% தேய்விடப்படுகிறது.
9. கொள்வனவு செய்யப்பட்ட பழுதுபார்த்தல் பொருட்களில் ரூபா 20 000 இருப்புக்கள் குறித்த காலப் பகுதியினுள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**வேண்டப்படுபவை :**

1. 2015.03.31 ல் முடிவடைந்த வருடத்திற்கான மேற்காட்டிய கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் பதிந்து காட்டவும்.

மோட்டார் வாகனப் பழுதுபார்த்தல் உபகரணம் + மோட்டார் வாகனப் பழுதுபார்த்தல் பொருட்கள் + வியாபாரத்திற்கு கிடைக்க வேண்டியவைகள் + முற்பணக் கொடுப்பனவு + காசு = உரிமை + வியாபாரம் செலுத்த வேண்டிய வைகள்

2. நிதியாண்டின் தேறிய இலாபத்தைக் கணிப்பதற்கு இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்று
3. 2015.03.31 ல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்றின் உருப்படிகள்

**(10 புள்ளிகள்)**

**(ஆ)** தளபாட விற்பனை நிறுவனமான **சுதர்சன் நிறுவனத்தின்** 2015.03.31 ல் முடிவடைந்த இறுதி மாதத்திற்கான கடன் விற்பனைகளும் அதனுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களும் கணக்கு இலிகிதரினால் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ரூபா

| திகதி | விபரம் | ரஞ்சன் | தயாளன் | சுதேஷ் | கருணாகரன் | முகமட் |
|---|---|---|---|---|---|---|
| 03.01 | மீதி | 15 000 | 100 000 | 110 000 | - | 55 000 |
| 03.05 | விற்பனை | | 150 000 | | | |
| 03.08 | கிடைத்த காசோலை<br>கொடுத்த கழிவு | | | 75 000<br>3 000 | | |
| 03.10 | விற்பனைகள் | | | | 200 000 | |
| 03.14 | உட் திரும்பல்கள் | | | | 20 000 | |
| 03.18 | கிடைத்த காசோலை<br>கொடுத்த கழிவு | | 95 000<br>5 000 | | | |
| 03.21 | மறுக்கப்பட்ட காசோலை<br>கொடுத்த கழிவு நீக்கம் | | 95 000<br>5 000 | | | |
| 03.25 | அறவிடமுடியாக்கடன் பதிவழிப்பு | 15 000 | | | | |
| 03.27 | பெற்ற காசோலைகள்<br>கொடுத்த கழிவு | | | | 76 000<br>4 000 | |
| 03.30 | விற்பனைகள் | | | | | 120 000 |

The National e-learning Portal for The General Education

மேலதிகத் தகவல்கள்

1. 2014.03.31 ல் முடிவடையும் வருடத்தில் ருக்சான் எனும் கடன்பட்டோரிடமிருந்து பதிவழிக்கப்பட்ட ரூபா 10 000 கடன் தொகை 2015.03.07 ம் திகதி காசாக மீளக் கிடைக்கப்பெற்றது.
2. சகல கடன் விற்பனைகளின்போதும் காட்சிப்படுத்தப்பட்ட விற்பனை விலைகளிலிருந்து 10% வியாபாரக் கழிவு குறைக்கப்பட்டிருந்தாலும் மேற்காட்டிய அட்டவணையில் விற்பனை, உட்டிருப்பம் என்பன காட்சிப்படுத்தப்பட்ட விற்பனை விலையிலேயே குறித்துக் காட்டப்பட்டுள்ளன.
3. சகல மாதங்களிலும் கடன்பட்டோரின் இறுதி மீதியின் அடிப்படையில் 5% ஐயக்கடன் ஏற்பாடொன்று செய்யப்படும்.

**வேண்டப்படுவது :**

2015 ல் மார்ச் மாதத்திற்கான பின்வரும் கூற்றுக்களைத் தயாரிக்கவும்.

1. விற்பனை நாளேடு
2. பகுத்தாய்வு நிரல்களுடன் கூடிய பெறுவனவு ஏடு (வங்கி)
3. அறவிடமுடியா ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு

**(05 புள்ளிகள்)**
**(மொத்தம் 15 புள்ளிகள்)**

4. **(அ)** 2015 மார்ச் 31 **சயான் வணிகத்தின்** கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 80 000 ஆகும். இது கடன்பட்டோர் மீதிப்பட்டியலின் மொத்தத்துடன் இணங்கவில்லை. மீளாய்வின்போது வித்தியாசத்திற்கான காரணங்களாக பின்வரும் தகவல்கள் வெளியாகின.

1. கடன்பட்டோர் மீதிப் பட்டியலைத் தயாரிக்கும்போது வரவு மீதி ரூபா 5 000 மும், செலவு மீதி ரூபா 500 வும் விடுபட்டிருந்தது.
2. குசுமாவிற்கு கடன் விற்பனை ரூபா 6 100 விற்பனை நாளேட்டில் ரூபா 1 600 எனப் பதிவு செய்யப்பட்டிருந்தது.
3. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்ட விற்பனையில் கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனப் பெறுமதி ரூபா 40 000 மும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
4. கடன்பட்டோரான பியுமியிடம் கிடைக்கப் பெற்ற ரூபா 3 100 அவரது கணக்கில் ரூபா 1 300 எனப் பதியப்பட்டிருந்தது.
5. கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 3 000 காசோலை மறுக்கப்பட்டமை அவரின் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டிருந்தது.
6. ஏடுகளில் முற்றாக விடுபட்ட செலவுத்தாளின் பெறுமதி ரூபா 2 500 ஆகும்.
7. கடன்பட்டோரொருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 1 000 கழிவு வணிகத்தினால் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் அது உரிய கடன்பட்டோர் கணக்கில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது.
8. கடன்பட்டோரொருவரான சனூன் என்பவரிடமிருந்து கிடைக்கவேண்டிய கடன் மீதியாகிய ரூபா 8 000 இனை அறவிட முடியாமை உறுதி செய்யப்பட்டமையினால் அதனை அறவிட முடியாக்கடனாகப் பதிவழிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பில் எவ்விதப் பதிவுகளும் ஏடுகளில் மேற்கொள்ளப்படவில்லை.

**வேண்டப்படுவது :**

1. உரிய சீராக்கங்களுடன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
2. மேற்குறித்த சீராக்கங்களை மேற்கொண்ட பின்னர் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியையும், சீராக்க முன்னர் பட்டியல் மீதியின் மொத்தத்தையும் ஒப்பீடு செய்யும் கூற்று,

**(10 புள்ளிகள்)**

**(ஆ)** 2015 மார்ச் 31 ம் திகதி **அரலிய வணிகத்தினால்** தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கானது ரூபா 21 500 ஐ செலவு மீதியாகக் காட்டியதுடன் அம்மீதியானது அத்திகதிக்கான வங்கிக்கூற்று மீதியுடன் சமப்படவில்லை. வங்கிக் கூற்று கிடைத்த பின்னர் வேறுபாட்டிற்கான காரணங்களாக பின்வருவன இனம் காணப்பட்டன.

1. காசோலைகள் வைப்புச் செய்யப்பட்டமை, அவை மறுக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு

| **காசோலை இலக்கம்** | **வைப்புச் செய்த திகதி** | **மறுக்கப்பட்ட திகதி** | **பெறுமதி ரூபா** |
|---|---|---|---|
| 043250 | 2015 மார்ச் 30 | 2015 ஏப்ரல் 02 | 4 500 |
| 215412 | 2015 மார்ச் 31 | 2015 ஏப்ரல் 03 | 33 500 |
| 721210 | 2015 மார்ச் 31 | 2015 ஏப்ரல் 03 | 16 000 |

2. மார்ச் மாதத்தினுள் வங்கியினால் நேரடியாக வணிகத்தின் வங்கிக் கணக்கில் குறைத்த தொகைகள் பின்வருமாறு

| | ரூபா |
|---|---|
| காசோலை புத்தகக் கட்டணம் | 400 |
| வங்கி மேலதிகப் பற்று வட்டி | 1 800 |
| வங்கிக் கட்டணம் | 450 |

3. 2015 மார்ச் 20 ம் திகதி ரூபா 20 000 பெறுமதியான குத்தகை தவணைக் கட்டணம் நிலையியற் கட்டளையின் பெயரில் வங்கியினால் செலுத்தப்பட்டுள்ளது.

4. கடன் கொடுத்தோருக்கு வழங்கப்பட்ட காசோலைகள் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட திகதிகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| **காசோலை இலக்கம்** | **வழங்கப்பட்ட திகதி** | **வங்கி செலுத்திய திகதி** | **பெறுமதி** |
|---|---|---|---|
| 010253 | 2015 மார்ச் 26 | 2015 ஏப்ரல் 10 | 95 000 |
| 010262 | 2015 மார்ச் 31 | 2015 ஏப்ரல் 04 | 16 500 |
| 010284 | 2015 மார்ச் 31 | 2015 ஏப்ரல் 04 | 21 500 |

5. 2015 மார்ச் 20 ம் திகதி ரூபா 12 000 இற்கு கடன்கொடுத்தோருக்கு வழங்கிய காசோலையொன்றிற்கு "கொடுப்பனவுகளை நிறுத்துக" என வணிகம் வங்கிக்கு கட்டளையிட்டுள்ளது. இதற்குரிய சீராக்கங்கள் வணிகத்தின் வங்கிக் கணக்கில் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், அக்காசோலைக்கான காசு செலுத்தப்பட்டதாக வங்கி அறிவித்துள்ளது.

6. 2015 மார்ச் 15 ம் திகதியில் வழங்கிய ரூபா 8 900 பெறுமதியான காசோலையொன்று வணிகத்தின் வங்கிக் கணக்கில் ரூபா 9 800 எனப் பதியப்பட்டுள்ளது.

7. கடன்பட்டோரினால் வங்கியில் நேரடியாக வைப்புச் செய்த தொகை ரூபா 40 300 ஆகும்.

**வேண்டப்படுவது**

1. 2015 மார்ச் 31 இற்குரிய செம்மையாக்கப்பட்ட வங்கிக் கணக்கு
2. 2015 மார்ச் மாதத்திற்கான வங்கி இணக்கக் கூற்று

**(05 புள்ளிகள்)**
**(மொத்தம் 15 புள்ளிகள்)**

05. **(அ)** வரையறுக்கப்பட்ட **தேவிந்த கம்பனியின்** 2015.03.31 ல் முடிவடைந்த வருடத்திற்கான பொழிப்பாக்கப்பட்ட வருமானக் கூற்றினதும் உரிமை மாற்றல் கூற்றினதும் உருப்படிகள் பின்வருமாறு

| வருமானக் கூற்று | ரூபா'000 |
|---|---|
| விற்பனைகள் | 20 500 |
| விற்பனைக் கிரயம் | (14 000) |
| மொத்த இலாபம் | 6 500 |
| ஏனைய வருமானங்கள் (நிலையான வைப்பு வட்டி) | 75 |
| செயற்பாட்டுச் செலவுகள் | (3 500) |
| ஏனைய செலவுகள் (கணினி விற்பனை நட்டம்) | (50) |
| நிதிச் செலவுகள் (கடன் வட்டி) | (760) |
| வரிக்கு முன் இலாபம் | 2 265 |
| வருமான வரி | (1 200) |
| நிதியாண்டுக்கான இலாபம் | 1 065 |

2015.03.31 ல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமை மாற்றல் கூற்று ரூபா'000

| | **நிறுத்தி வைத்த உழைப்பு** |
|---|---|
| 2014.04.01 மீதி | 540 |
| மொத்த விரிவான வருமானம் | 1 065 |
| பங்கிலாபம் | (605) |
| 2015.03.31 நிறுத்தி வைத்த உழைப்பின் மீதி | 1 000 |

மேலதிகத் தகவல்கள்

1. விற்பனை செய்த கணினியின் தேறிய பெறுமதி 120 000 ஆகும்.
2. செயற்பாட்டுச் செலவினுள் உள்ளடக்கப்பட்ட பெறுமானத் தேய்வின் பெறுமதி ரூபா 300 000 ஆகும்.
3. நிதி நிலமைக் கூற்றிலிருந்தும் எடுக்கப்பட்ட மீதிகள் பின்வருமாறு.

The National e-learning Portal for The General Education

| | ரூபா'000 களில் | |
|---|---|---|
| | **2015.03.31** | **2014.03.31** |
| சாதாரண பங்கு மூலதனம் | 15 500 | 15 000 |
| முன்னுரிமைப் பங்குகள் | 10 000 | 10 000 |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் | 7 700 | 8 000 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 1 440 | 300 |
| பெற வேண்டிய வட்டி | 40 | 50 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 3 200 | 2 900 |
| வருமான வரி ஒதுக்கம் | 150 | 100 |
| முன் மொழியப்பட்ட பங்கிலாபம் | 200 | 250 |
| அட்டுறு கடன் வட்டி | 120 | 60 |
| ஏனைய நடைமுறை பொறுப்புக்கள் | 860 | 750 |

4. வருடத்தில் ஆதனம் பொறி மற்றும் உபகரணத்திற்கான மீள்மதிப்பீடு இடம்பெறவில்லை. அத்துடன் 2015.03.31 ல் பிரதியெடுத்தல் இயந்திரமொன்றும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது.

1. இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இற்கமைய காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்க (செயற்பாட்டு நடவடிக்கைகளை நேரில் முறையில் முன்வைக்கவும்.)

**(08 புள்ளிகள்)**

**(ஆ) சுமங்கலி கல்வி நிறுவனமானது** மாணவர்களுக்கு இரு நாட்களைக் கொண்ட செயலமர்வொன்றை நடாத்துவதற்கு உத்தேசிக்கின்றது. இதில் மாணவர்கள் 200 பேர் வரை பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒரு மாணவனிடமிருந்து இரு நாள் செயலமர்வுக்குமாக ரூபா 1 000 அறவிடப்படுவதுடன் இதற்காக மதிப்பிடப்பட்ட செலவுகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | ரூபா |
|---|---|
| **நாளொன்றுக்கு** தேநீர், பகலுணவு | 100 |
| கோவை அட்டைகள் **இரு நாட்களுக்கும்** | 40 |
| இருவெட்டு (CD) **இரு நாட்களுக்கும்** | 60 |
| மண்டப வாடகை **ஒரு நாளைக்கு** | 15 000 |

- இரு நாள் செயலமர்விற்கும் செலவாகுமென எதிர்பார்க்கப்படும் செலவுகளின் விபரம் பின்வருமாறு.

| | ரூபா |
|---|---|
| மின்சாரம், குளிரூட்டல் செலவு | 8 000 |
| மண்டப ஒழுங்கமைப்புச் செலவு | 3 000 |
| ஒலி பெருக்கி இயந்திரம் | 4 000 |
| விரிவுரையாளர் கட்டணம் | 60 000 |

**வேண்டப்படுவது :**

1. இச்செயலமர்விற்கான உத்தேச மதிப்பிடப்பட்ட செலவுகளை பெற்றுக் கொள்வதற்கு பங்கு பற்றச்செய்ய வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையைக் கணிக்க.
2. உத்தேசிக்கப்பட்டவாறு இரு நாள் செயலமர்விற்கும் 200 மாணவர்களும் காசு செலுத்தி பங்கு பற்றினால் உழைக்கக் கூடிய இலாபத்தைக் கணிக்க.
3. சுமங்கலி கல்வி நிறுவனம் ரூபா 56 000 ஐ இலாபம் உழைக்க எதிர்பார்ப்பின் இச்செயலமர்வில் பங்குபற்றச் செய்ய வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையைக் கணிக்க.
4. உத்தேசிக்கப்பட்ட தொகையினை விட 50 மாணவர்கள் மேலதிகமாக கலந்து கொண்டால் உத்தேச இலாபத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்பினைக் கணிக்க.

**(07 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education

06. **(அ) சிறிமல்** தனது உயர்தரப் பரீட்சையின் பின்னர் தந்தையின் நிதி உதவியுடன் பிரதியெடுத்தல் சேவையொன்றினை தனது பாடசாலையின் முன்னாள் ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளார். மாற்று சந்தர்ப்பங்கள் சிலவற்றில் மிகவும் கவர்ச்சிகரமான இரு சந்தர்ப்பங்களான அல்பா, பீட்டா இயந்திரங்கள் இரண்டு தொடர்பில் மதிப்பிடப்பட்ட கிரயம், எதிர்பார்க்கப்படும் வருமானங்கள் தொடர்பிலான நிலமைகள் பின்வருமாறு,

| | | **அல்பா** | **பீட்டா** |
|---|---|---|---|
| இயந்திரத்தின் கொள்விலை | ரூபா | 355 000 | 395 000 |
| எதிர்பார்க்கப்படும் பயன்படு ஆயுற்காலம் | | 05 வருடங்கள் | 05 வருடங்கள் |
| இயந்திரத்தை கொண்டுவரும் கிரயம் | ரூபா | 5 000 | 5 000 |
| ஆயுற்கால முடிவில் இழிவுப் பெறுமதி | ரூபா | 40 000 | 50 000 |
| ஒரு பிரதியெடுத்தலுக்கான மாறும் கிரயம் | ரூபா | 1.50 | 1.00 |
| ஒரு பிரதியெடுத்தலுக்கு அறவிடும் கட்டணம் | ரூபா | 6.00 | 6.00 |

- இவ்வியந்திரங்களிலிருந்து 05 வருடங்களினுள் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் பிரதிகளின் எண்ணிக்கை பின்வருமாறு.

| வருடங்கள் | அல்பா | பீட்டா |
|---|---|---|
| 1 | 30 000 | 34 000 |
| 2 | 36 000 | 42 000 |
| 3 | 40 000 | 38 000 |
| 4 | 38 000 | 34 000 |
| 5 | 20 000 | 22 000 |

- மதிப்பிடப்பட்ட வருடாந்த பொது மேந்தலைக்கிரயம் ரூபா 80 000 ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

  10% எதிர்பார்ப்பு அனுகூல விகிதம் (கழிவுக் காரணி) பின்வருமாறு.

| வருடங்கள் | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| கழிவுக்காரணிகள் | 1 | 0.9 | 0.8 | 0.7 | 0.6 | 0.5 |

**வேண்டப்படுவது :**

1. ஒவ்வொரு இயந்திரத்திலும் மீளச் செலுத்தும் காலம்.
2. ஒவ்வொரு இயந்திரத்தினதும் முதலீட்டு அனுகூல விகிதம்.
3. ஒவ்வொரு இயந்திரத்தினதும் தேறிய நிகழ்காலப் பெறுமதியினைக் கணிப்பீட்டு அதனடிப்படையில் சிறிமல் எவ்வியந்திரத்தை கொள்வனவு செய்ய வேண்டும் என்பதை காரணங்களுடன் குறிப்பிடுக.

**(10 புள்ளிகள்)**

The National e-learning Portal for the General Education

**(ஆ)** பின்வரும் தகவல்கள் வரையறுக்கப்பட்ட **LRP கம்பனியின்** 2015 மார்ச் 31 ல் முடிவடையும் மாதத்திற்கான ஊழியர் சம்பளம் கூலி தொடர்பானவையாகும்.

| **ஊழியரின் இலக்கம்** | **ஊழியரின் பெயர்** | **அடிப்படைச் சம்பளம்** | **ஏனைய கொடுப்பனவுகள்** | **மேலதிகக் கொடுப்பனவுகள்** |
|---|---|---|---|---|
| 0100 | சரன் | 50 000 | 20 000 | - |
| 0101 | கரன் | 30 000 | 12 000 | - |
| 0102 | சாஜித் | 20 000 | 8 000 | 6 000 |
| 0103 | லதீப் | 18 000 | - | 12 000 |

மேலதிகத் தகவல்கள் :

(1) கரன், சாஜித், லதீப் என்பவர்களிடமிருந்து முறையே ரூபா 3 000, ரூபா 2 000, ரூபா 1 500 என மாதாந்தம் பண்டிகை முற்பணம் கழிக்கப்படும்.

(2) சாஜித்தின் குத்தகைத் தவணைக் கட்டணம் ரூபா 6 000 ம் லதீபின் வங்கிக்கடன் தவணைக்கட்டணம் ரூபா 4 000 கம்பனியினால் சம்பளத்திலிருந்து கழிக்கப்படும்.

(3) ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதி என்பவற்றைக் கணிப்பதற்கு மேலதிக நேரக் கொடுப்பனவு தவிர்ந்த ஏனைய சகல கொடுப்பனவுகளும் கவனத்தில் கொள்ளப்படும் என்பதுடன் ஊழியர் சேமலாப நிதிக்கான பங்களிப்பு பின்வருமாறு.

| | |
|---|---|
| சேவை வழங்குநரின் பங்களிப்பு | 12% |
| ஊழியரின் பங்களிப்பு | 8% |

(4) ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு நிறுவனத்தின் பங்களிப்பு 3% ஆகும்.

(5) ஒவ்வொரு மாதத்திற்குமான சம்பளம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றை அதற்கடுத்து வரும் மாதத்தில் செலுத்துவது கம்பனியின் கொள்கையாகும்.

**வேண்டப்படுவது :**

1. 2015 மார்ச் மாதத்திற்கான
   1. சம்பளப் பட்டியல்.
   2. சம்பளமும் கூலியும் கட்டுப்பாட்டுக் கணக்கு
   3. நிலுவை EPF கணக்கு **(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

07. **(அ)** வரையறுக்கப்பட்ட **இசுறு கம்பனியின்** 2014/03/31 இல் இயந்திரங்கள் கணக்கின் மீதி ரூபா 600 000 உம், இயந்திரங்களின் தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 125 000 உம் ஆகும். இவ்வியந்திரங்கள் சகலதும் 2013/04/01 இல் கொள்வனவு செய்யப்பட்டதுடன், அத்திகதியில் அவற்றின் பயன்பாடு ஆயுற்காலம் 4 வருடங்கள் எனவும் இழிவுப் பெறுமதி ரூபா 100 000 எனவும் மதிப்பீடு செய்யப்பட்டது.

2015/03/31 ல் முடிவடையும் வருடத்தினுள் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன.

2014/04/01 இல் ரூபா 120 000 கிரயம் கொண்டதும், ரூபா 20 000 இழிவுப் பெறுமதியைக் கொண்டதுமான இயந்திரம் ரூபா 110 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.

2014/04/01 இல் எஞ்சிய சகல இயந்திரங்களினதும் பயன்படு ஆயுற்காலம் 5 வருடங்கள் என மதிப்பிடப்பட்டது.

**வேண்டப்படுவது :**

1. இயந்திரங்களை அகற்றுவதற்குரிய நாட்குறிப்புப் பதிவுகள்
2. 2015/03/31 ல் முடிவடையும் வருடத்திற்கான இயந்திரக்கணக்கும் இயந்திரத் தேய்வு ஏற்பாட்டுக் கணக்கும்.

**(05 புள்ளிகள்)**

**(ஆ)** பாடசாலையொன்றில் ஆசிரியர்களினால் உருவாக்கப்பட்ட **"குரு செவன"** என்ற பெயர் கொண்ட ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தின் 2015.03.31 ல் முடிவடையும் வருடத்திற்கான சில தகவல்கள் பின்வருமாறு.

- 2014.04.01 ல் சங்கத்திடம் ரூபா 80 000 காசு மீதியொன்று காணப்பட்டதுடன், அத்திகதியில் திரண்ட நிதி ரூபா 320 000 ஆகும்.
- 2015.03.31 ல் சங்கத்தில் 124 அங்கத்தவர்கள் இருந்ததுடன் ஒருவரின் மாதாந்த அங்கத்துவக் கட்டணம் ரூபா 200 ஆகும். நிதியாண்டினுள் இணைக்கப்பட்ட, விலகிச் சென்ற அங்கத்தவர்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| திகதி | இணைக்கப்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை | விலகிச் சென்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2014.07.01 | 02 | 05 |
| 2014.10.01 | 02 | - |

The National e-learning Portal for The General Education

சங்கத்தில் புதிதாக இணைந்த அங்கத்தவர்களிடமிருந்து உரியவாறு அங்கத்துவக் கட்டணம் கிடைத்திருந்தாலும், விலகிச்சென்ற அங்கத்தவர்கள் நிதியாண்டுக்குரிய அங்கத்துவக் கட்டணத்தை செலுத்தவில்லை.

- ஆசிரியர் நலன்புரிச் சங்கத்திற்கு உதவும் பொருட்டு "குரு பிரதீபா" என்ற பெயரில் நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டதுடன், டிக்கெட் விற்பனை, நினைவு மலர் என்பவற்றின் மூலம் ரூபா 300 000 வருமானம் கிடைக்கப்பெற்றது. இதற்கான செலவுகளான டிக்கெட்டை அச்சிடுதல் செலவு ரூபா 15000, உம், உபசரிப்புச் செலவு ரூபா 50 000 உம் நிகழ்ச்சியின் ஏனைய செலவுகளாக ரூபா 35 000 உம் காசாக செலுத்தப்பட்டுள்ளது.
- 2014.04.01 ல் சங்கத்திற்கு ரூபா 200 000 பெறுமதியான கணினியொன்று நன்கொடையாக கிடைத்ததுடன், அதற்கு வருடாந்தம் 25% தேய்வு ஏற்பாடு செய்வதற்கும், 04 வருடங்களினுள் இந்நன்கொடையினை சமமான வருமானமாக இனம் காட்டுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.
- நிதியாண்டினுள் 12 அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு வருடாந்தம் தலா ரூபா 15 000 வீதம் புலமைப்பரிசில் செலுத்த வேண்டியிருந்தாலும் 08 பேருக்கு மாத்திரமே அது காசாக செலுத்தப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது :**

"குரு செவன" நலன்புரிச் சங்கத்தின் 2015.03.31 ல் முடிவடையும் வருடத்திற்கான

1. வருடாந்த அங்கத்துவச் சந்தா வருமானம்
2. பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு (காசுக்கணக்கு)
3. வருமானச் செலவுக் கணக்கு
4. 2015.03.31 ல் திரண்ட நிதி கணிப்பிடுக. **(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**